சிறப்பு நீதிமன்றம் (எஸ்.சி/எஸ்.டி. வழக்குகள்), திருவண்ணாமலை,
திருவண்ணாமலை மாவட்டம்.

முன்னிலை– **திருமதி.V.சுதா, பி.எல்.,**
அமர்வு நீதிபதி, எஸ்.சி/எஸ்.டி வழக்குகள்,
திருவண்ணாமலை.

2026ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13ஆம் நாள் வியாழக்கிழமை

**சிறப்பு அமர்வு வழக்கு எண்.9/2019**
**C.N.R.No.TNTM.18–000017–2019**

**(வந்தவாசி தெற்கு காவல் நிலைய குற்ற எண்.480 /2009 )**

| | | |
|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | : | காவல் துணை கண்காணிப்பாளர்,<br>வந்தவாசி உட்கோட்டம்,<br>வந்தவாசி தெற்கு காவல்நிலையம்,<br>குற்ற எண்.480/2009. |
| எதிரிகளின் பெயர்கள் மற்றும் விலாசம் | : | 1. முகமது அலி, வயது 29/2009, த/பெ.சர்தார், மத்துமரை காயர் தெரு, வந்தவாசி.<br>2. தமின்பாட்சா, வயது 28/2009, த/பெ.அப்துல்ரகிம், நெமந்தகார தெரு, வந்தவாசி. |
| எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | : | 1–ம் எதிரி கைது செய்யப்பட்ட நாள்–<br>2–ம் எதிரி கைது செய்யப்பட்ட நாள்– 11.08.2009 |
| எதிரிகள் பிணையில் வெளிவந்த நாள் | : | 1–ம் எதிரி பிணையில் வெளிவந்த நாள்–<br>2–ம் எதிரி பிணையில் வெளிவந்த நாள் –18.08.2009 |
| குற்ற அறிக்கை தாக்கல் செய்த நாள் | : | 24.11.2009 & 12.01.2010 |

| | | |
|---|---|---|
| | | |
| முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வந்தவாசியில் இருந்து வழக்கு committal ஆகி வந்த நாள் | : | 28.06.2010 |
| முதல் விசாரணை நீதிமன்றம் | : | வழக்கினை கோப்பிற்கு எடுத்த சிறப்பு நீதிமன்றம் (எஸ்.சி/எஸ்.டி. வழக்குகள்), திருவண்ணாமலை, ( வந்தவாசி தெற்கு காவல்நிலைய குற்ற எண்.480/2009) |
| எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | 1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 341, 323, மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989 , மற்றும் இதச பிரிவுகள் 341, 506(1) மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989–ன் கீழும்,<br><br>2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 341 r/w 34, 323, 506(1) r/w 34 மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989–ன்கீழும் குற்றசாட்டுகள் வனையப்பட்டுள்ளது. |
| எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | : | 28.09.2016 |
| எதிரிகளின் பதிலுரை | : | குற்றவாளிகள் இல்லை |
| சட்டப்பிரிவு 317 கு.வி.மு.ச அல்லாத இதர வழக்கிடை மனுக்களின் உத்தரவு மற்றும் அதன் மீது மேல்முறையீடு செய்த விவரங்கள் மற்றும் அதன் உத்தரவு | : | -- |
| வழக்கில் சாட்சிகளை முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்த விவரம் | : | |

| சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| அ.சா.1 | 14.11.2018 | 30.11.2018 & 17.06.2025 |
| அ.சா.2 | 14.11.2018 | 31.01.2019 |

| | | |
|---|---|---|
| | | |

| | | |
|---|---|---|
| அ.சா.3 | 14.11.2018 | 24.10.2019 |
| அ.சா.4 | 14.11.2018 | 14.11.2018 |
| அ.சா.5 | 14.11.2018 | 14.11.2018 |
| அ.சா.6 | 14.11.2018 | 14.11.2018 |
| அ.சா.7 | 14.11.2018 | 14.11.2018 |
| அ.சா.8 | 05.02.2019 | – |
| அ.சா.9 | 05.11.2019 | 05.11.2019 |
| அ.சா.10 | 18.11.2019 | – |
| அ.சா.11 | 02.12.2019 | 02.12.2019 |
| அ.சா.12 | 16.07.2026 | 16.07.2026 |

| | | |
|---|---|---|
| எதிரி தரப்பில் சாட்சிகளை முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்த விவரம் | : | --- |
| கு.வி.மு.ச பிரிவு 313–ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 31.07.2026 |
| வழக்கு நிலுவையில் உள்ளபோது எதிரிகள் தலைமறைவாகி விட்டாரா மற்றும் அதன் பின்பு எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரான தேதி, விவரம் | : | --- |
| மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் வழக்கு குறித்து ஏதேனும் தடை உத்தரவு பெறப்பட்டு உள்ளதா? இருப்பின் அதன் விவரம் | : | --- |
| நீதிபதியின் தீர்மானம் – தீர்ப்பு – உத்தரவு | : | **முடிவாக,** 1ம் எதிரி இதச பிரிவுகள் 341, 323, மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989 , மற்றும் இதச பிரிவுகள் 341, 506(1) மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989ன் கீழும், |

| | | |
|---|---|---|
| | | 2ம் எதிரி இதச பிரிவுகள் 341 r/w 34, 323, 506(1) r/w 34 மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, 1,2 எதிரிகளை குவிமுச பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>1,2 எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணைய முறியை மேல்முறையீட்டு கால அவகாசத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.<br>இவ்வழக்கில் அரசு தரப்பில் சான்றுப்பொருட்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லையென்பதால் அதுகுறித்து உத்தரவு ஏதுமில்லை. |
| அரசு தரப்பில் சிறப்பு வழக்கறிஞர் | : | திரு.வி.ராமச்சந்திரன் |
| எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் | : | திரு.வி.ராமகிருஷ்ணன் |
| வாதுரை கேட்கப்பட்ட நாள் | : | 04.08.2026 |
| தீர்ப்பு பகரப்பட்ட நாள் | : | 13.08.2026 |

இந்த சிறப்பு அமர்வு வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன் 04.08.2026 தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் சிறப்பு வழக்கறிஞர் திரு.வி.ராமச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. வி.ராமகிருஷ்ணன் அவர்களும், ஆஜராகி இருதரப்பினர்களும் முன்னிலைப்படுத்திய இருதரப்பு வாதங்கள்,

ஆவணங்கள் மற்றும் வாய்மொழி சாட்சியங்கள் இன்றுவரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

## தீர்ப்புரை

**குற்றப்பத்திரிகையின் சுருக்கம்:**

குற்றமுறையிடுபவரான காவல்துணை கண்காணிப்பாளர், வந்தவாசி உட்கோட்டம், இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையில், இவ்வழக்கின் புகார்தாரரான சரவணன். த/பெ. ராஜேந்திரன் மற்றும் அரவது நண்பர் வடிவேலு ஆகியோர் இந்து இருளர் வகுப்பை சேர்ந்தவர்கள் என்றும், 1,2 எதிரிகள் முஸ்லீம்–ரப்பை வகுப்பை சேர்ந்தவர்கள் என்றும், 10.08.2009 ந் தேதியன்று, காலை 7.30 மணிக்கு வந்தவாசி கேட்டை மூலை அருகில் முன்விரோதம் காரணமாக, 1ம் எதிரி சாட்சி வடிவேலுவை இழிவுபடுத்தி தொல்லை கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில், அவரை வழிமடக்கி, " எலி கறி தின்ற இருள பையனுக்கு இவ்வளவு திமிர மரியாதையாய் பணத்தை கொடுடா தேவடியா பையா " என்று பொதுவிடத்தில், பொதுமக்களின் முன்னிலையில், இழிவாக பேசியும், சாட்சி வடிவேலுவின் மார்ப்பில் அடித்து சொற்ப காயம் ஏற்படுத்தியும், 2ம் எதிரி சாட்சி வடிவேலுவின் வயிற்றில் குத்தி சொற்ப காயம் ஏற்படுத்தியும், சாட்சி வடிவேலுவை பார்த்து " இருள நாயே வாங்கிய பணத்தை கொடுடா" என்று சாதியை குறிப்பிட்டு இழிவாக பேசியும், பின்பு மோற்சொன்ன நாளில், காலை 9.45 மணிக்கு வந்தவாசி டவுன், பிணாங்கு காதர் தெரு அருகில் உருது பள்ளி அருகில் 1ம் எதிரி வாதி சரவணனை வழிமறித்து தடுத்து நிறுத்தியும், வாதி சரவணனை பார்த்து " டேய் இருள தேவடியா பையா " என்று ஜாதி பெயரைச் சொல்லி இழிவாக பேசியும், வாதி

சரவணனை பார்த்து " உன்னை ஒழிக்காமல் விடமாட்டேன்" என்று மிரட்டி உயிரச்சம் ஏற்படுத்தி உள்ளதாகவும், எனவே, எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341, 323, 506(1) மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989, ன் கீழும், குற்றவாளிகள் என குறிப்பிட்டு, குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இவ்வழக்கில் 10.08.2009ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, பின்னிட்டு எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341, 323, 506(1) மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989ன் கீழ் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, வந்தவாசி ddமுதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, , அந்நீதிமன்றத்தால் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.3/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானபோது இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிகளுக்கு எதிரிகளுக்கு இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207ன்படி வழங்கப்பட்டுள்ளது. எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அமரவு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்கது என்பதால் இவ்வழக்கை கு.வி.மு.ச.பிரிவு 209(அ)ன்படி திருவண்ணாமலை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டு, திருவண்ணாமலை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் சிறப்பு அமர்வு வழக்கு எண்.21/2016 ஆக பதிவு செய்யப்பட்டு, வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, எதிரிகள் முன்னிலையானவுடன் ஆவணங்கைள பரிசீலித்து, இருதரப்பு வாதங்களைக் கேட்டும், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றத்தை அவர்கள் இழைத்திருக்கக்கூடும் என்று

அனுமானிப்பதற்கு போதிய ஆதாரங்கள் வழங்களில் இருப்பதாக கருதி, 1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 341, 323, மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989 , மற்றும் இதச பிரிவுகள் 341, 506(1) மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989 –ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 341 r/w 34, 323, 506(1) r/w 34 மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989 ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து தமிழில் விளக்கக் கூறி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டுக்களை மறுத்துரைத்தார்கள். ஆகவே வழக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டது. பின்னர், இவ்வழக்கானது திருவண்ணாமலை முதன்மை மாவட்ட நீதிமன்றத்திலிருந்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி ( Letter in ROC.NO.1061/A/2015/G4 dated 22.06.2018) இந்நீதிமன்றத்திற்கு 09.08.2019 அன்று மாற்றப்பட்டு, இந்நீதிமன்றத்தில் சிறப்பு வழக்கு எண்.09/2019 ஆக கோப்பில் எடுக்கப்பட்டுள்ளது.

3. <u>அரசு தரப்பு சாட்சிகளின் தொகுப்பு –</u>

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.12 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரையான சான்றாவணங்களும், குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து இவ்வழக்கினைப்பற்றி கீழ்க்கண்டவாறு தெரிய வருகிறது.

4. அ.சா.1 திரு.சரவணன், தனது சாட்சியத்தில், தான் தற்போது கே.எஸ்.கே. நகர் வந்தவாசியில் குடியிருந்து இந்திய மார்க்கலீஸ்ட் மலைவாழ் மக்களின் பொது செயலாளராக பணி புரிந்து வருவதாகவும், ஆஜர் எதிரிகளை

தெரியும் என்றும், தான் இருளர் இனத்தைச் சேர்ந்தவர் என்றும், 10.8.2009 அன்று காலையில் 7.30 மணி அளவில் தானும் தங்க சங்க உறுப்பினர் வடிவேலுவும் டீக்கடையில் டீ குடித்துக் கொண்டு இருந்தபோது முகமது அலி வந்து, வடிவேலுவை பார்த்து ஜமீன் பாஷாவிடம் கல்லு உடைக்க பணம் வாங்கினாயே? ஏன் கொடுக்கவில்லை என்று கேட்டதற்கு வடிவேலு ஜமீன் பாஷாலிடம் வாங்கின காசை தான் கொடுக்கிறேன் நீ ஏன் கேட்கிறாய் என்று கேட்டதாகவும், அதற்கு இருளர் பையனுக்கு இவ்வளவு ஆச்சா என்று திட்டி மார்பின் மீது அடித்ததாகவும், வாங்கின காசை குடுப்பதற்கு கசக்கிறதாடா இருளர் நாயே என்று திட்டியதாகவும், ஜமீன் பாஷா வடிவேலுவை குத்தியதாகவும், அதன்பிறகு மழையூர் சரவணன் தெள்ளார் சிவராமன் கோட்டைமுலையில் கடை வைத்திருக்கிற அலாவூதீன் சேர்ந்து வடிவேலுவை அழைத்துக் கொண்டு போய் வந்தவாசி அரசு மருத்துவமனையில் சேர்த்ததாவும் சேர்த்து முடித்து விட்டு வீட்டிற்கு வரும் போது பினாங்கார தெருவில் உருதுபள்ளி அருகில் வரும் போது முகமது என்பவர் தன்னை வழியில் மடக்கி அவர் இரண்டு சக்கர வாகன வண்டியை எடுத்துக் கொண்டு குறுக்கில் போட்டு இருளர் சங்கம் வைத்துக் கொண்டு சேர்ந்து எல்லாரையும் மிரட்டுகிறாயா? உன்னை ஒழித்துக் கட்டுகிறேன் என்று தன் கழுத்தை நெறித்ததாகவும், அதன் பிறகு அதன்பிறகு மழையூர் சரவணன் தெள்ளார் சிவராமன், காயிதே மில்லத் நகரை ரகமத்துல்லா பிருதூர் சம்பத் எல்லாம் சேர்ந்து தன்னை விலக்கி விட்டதாவும், ரகமத்துல்லா தன்னை மருத்துவமனையில் சேர்த்ததாகவும், இது சம்மந்தமாக வந்தவாசி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், வந்தவாசி போலீசார் விசாரித்து வாக்குமூலம் வாங்கியதாகவும், புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அந்த கையெழுத்து டி.எஸ்.பி. தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. அ.சா.2 திரு.வடிவேல், தனது சாட்சியத்தில், தான் தற்போது வந்தவாசி பக்கத்தில் உள்ள மேல்பாதிரி கிராமத்தில் குடியிருந்து கல்லு உடைக்கும் வேலை செய்து வருவதாகவும், தாங்கள் இருளர் சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்றும் எதிரிகளை தெரியும் என்றும், 10.8.2009 அன்று தான் வந்தவாசி காலையில 7.30 மணிக்கு டீ குடிக்க போனதாகவும், அகமத்பாஷாவும், முகமது அலியும் அங்கிருந்ததாகவும், ஜமீம்பாஷாவுக்கு கொடுக்க வேண்டிய காசை கேட்டதாகவும், அதற்கு நீ கேட்காதே என்று சொன்னதற்கு தன்னை மார்பின் மீது அடித்து விட்டதாகவும், சிவராமன், சரவணன், சம்பத் எல்லாம் அங்கிருந்ததாகவும், சங்க தலைவர் தன்னை ஆஸ்பத்திரியில் சேர்த்ததாகவும், அவரையும் அடித்து விட்டதாகவும், அவரும் மருத்துவமனையில் இருந்ததாகவும், இது சம்மந்தமாக டி.எஸ்.பி தன்னை விசாரணை செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

6. அ.சா.3 திரு.சிவராமன், தனது சாட்சியத்தில், தான் தற்போது தெள்ளார் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் மற்றும் கட்சிப் பணி செய்து வருவதாகவும், கம்யூனிஸ்ட் கட்சி பணியில் இருப்பதாகவும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், 10.8.2009 அன்று காலையில் 7.30 மணிக்கு சரவணனை பார்பதற்காக வந்தவாசி கோட்டை மைதானத்தில் உள்ள டீக் கடையில் நின்று கொண்டு இருந்ததாகவும், வடிவேலு, சரவணனும் பேசிக் கொண்டிருந்ததாகவும், அப்போது முகமது அலி என்பவர் வந்து வடிவேலுவிடம் ஆர்கியுமெண்ட் செய்து கொண்டிருந்ததாகவும் வடிவேலுவை கையால் அடித்ததாகவும், கேஸ்டை சொல்லி இருளர் ஜாதியை சொல்லி திட்டியதாகவும், பிறகு தான், சரவணன் விலக்கி விட்டதாகவும், தானும் மற்றவர்களும் வடிவேலுவை வந்தவாசி அரசு மருத்துவமனையில் கொண்டு

போய் சேர்த்ததாகவும், தான் வரும் போது தெருபாடசாலை வழியில் முகமது அலி, சரவணனை தாக்கியதாகவும், அவர் ஜாதியை சொல்லி தாக்கியதாகவும், ஜமீனர் பாஷாவும் உடன் இருந்ததாவும், வடிவேலுவை ஜமீன்பாஷா, முகமது அலி கைகளால் தாக்கியதாகவும், அதன் பிறகு அங்கயிருந்து கிளம்பி வந்துவிட்டதாகவும், இதுசம்மந்தமாக போலீசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

7. அ.சா.4 திரு.சரணவன், தனது சாட்சியத்தில், தான் தற்போது வந்தவாசி மழையூர் கிராமத்தில் குடியிருந்து சொந்தமாக கார் வைத்து டிரைவராக ஓட்டி வருவதாகவும், சரவணன் வடிவேலுவை தெரியாது என்றும், எதிரிகளையும் தெரியாது என்றும், இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், 9 வருடத்திற்கு முன்னால போலீசார் கையெழுத்து வாங்கினார்கள் என்றும், வேறு எதுவும் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

8. அ.சா.5 திரு. அலாவூதீன் தனது சாட்சியத்தில், தான் தற்போது வந்தவாசி கலுங்குமறைக்காயர் தெருவில் குடியிருந்து பங்க் கடை வைத்துள்ளதாகவும், ஆஜர் எதிரிகளை தெரியாது என்றும், சாட்சிகளையும் தெரியாது என்றும், போலீசார் விசாரித்ததாகவும், அவர்களிடமும் எதுவும் தெரியாது என்று தான் சொன்னதாகவும், தான் கடையை பார்த்துக் கொண்டிருந்ததாகவும், இந்த வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

9. அ.சா.6 திரு.ரகமத்துல்லா, தனது சாட்சியத்தில், தான் தற்போது வந்தவாசியில் குடியிருந்து பங்க் கடை வைத்துள்ளதாகவும், ஆஜர் எதிரிகளை

தெரியும் என்றும், சாட்சி சொன்னவர்களை தெரியாது என்றும், கேசை பற்றி எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், இந்த வழக்கு பற்றி ஒன்றும் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

10. அ.சா.7 திரு.சம்பத், தனது சாட்சியத்தில், தான் தற்போது வந்தவாசியில் பிருதூர் குளக்கரையில் குடியிருந்து முடிதிருத்தம் கடை வைத்துள்ளதாகவும், சரவணன், வடிவேலுவை தெரியாது என்றும், ஆஜர் எதிரிகளை தெரியாது என்றும், வழக்கு பற்றி ஒன்றும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

11. அ.சா.8 திரு,கருணாநிதி, தனது சாட்சியத்தில், தான் தற்போது வேலையில் இருந்து பணி ஓய்வு பெற்றுள்ளதாகவும், தான் வழக்கு சம்பவத்தின் போது வந்தவாசி வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியராக பணி புரிந்து வந்ததாகவும், வந்தவாசி காவல் துணை கண்காணிப்பாளர் எதிரிகள் தமிம், முகமது அஜீத் ஆகியோருக்கு ஜாதி சான்றிதழ் கேட்டு தன்னிடம் கடிதம் கொடுத்தன் பேரில் அவர்கள் இருவருக்கும் ஜாதிச் சான்றிதழ் வழங்கியதாகவும், எதிரிகளின் ஜாதிச் சான்றிதழ் அத.சா.ஆ– 2, அ.த.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12. அ.சா.9 திரு. டாக்டர் சுதாகரன், தனது சாட்சியத்தில், தான் தற்போது செங்கல்பட்டு அரசு கல்லூரி மருத்துவமனையில் சிறுநீரக துறையில் உதவி போராசிரியராக பணிபுரிந்து வருவதகவும், கடந்த 10.08.2009 அன்று வந்தவாசி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது, 35 வயதுடைய வடிவேல் த/பெ குப்பன் என்பவர் அன்று காலை 07.00 மணியளவில் வந்தவாசி கோட்டை மூலை அருகே தன்னை இரண்டு

தெரிந்த நபர்கள் கை, கால்களால் அடித்ததாக புகார் கூறியதாகவும், அவரை பரிசோதித்த போது கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டதாகவும், 1. வயிறு வலி, 2. நெஞ்சு வலி, 3. வலது பக்க தாடை வலி இருப்பதாக கூறியதாகவும், அவரை பரிசோதித்து உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்ததாகவும், அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று சான்று வழங்கியதாகவும், அதே நாள் காலை 10.10 மணிக்கு சரவணன் த/பெ ராஜேந்திரன் என்பவர் தன்னை தெரிந்த ஒரு நபர் கைகாலால் வந்தவாசி விகே ஓட்டல் அடித்ததாக கூறிசிகிச்சைக்கு வந்ததாகவும், அவரை பரிசோதித்த போது கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டதாகவும், 1. இடது காது வலி, 2. வயிறு வலி, 3. நெஞ்சு வலி இருப்பதாகவும், வீக்கமாக உள்ளதாகவும் கூறியதாகவும் அவரை பரிசோதித்து உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்ததாகவும், அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று சான்று வழங்கியதாகவும், மேற்படி காயம் பட்ட இரு நபர்களும் இரண்டு நாட்கள் சிகிச்சை எடுத்துக் கொண்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். வடிவேலின் காயசான்றிதழ் அ.த.சா.ஆ.4 ஆகவும், சரவணனின் காயசான்றிதழ் அ.த.சா.ஆ. 5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

13. அ.சா.10 திரு.முருகன், தனது சாட்சியத்தில் தான் 2009 ஆம் ஆண்டு செய்யாறு வருவாய் கோட்டாட்சியராக பணிபுரிந்த போது, வந்தவாசி காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் வந்தவாசி தெற்கு காவல் நிலைய குற்ற எண் 480/2009 வழக்கில் வாதி திரு.சரவணன் தந்தை பெயர் ராஜேந்திரன், வந்தவாசி மற்றும் திரு.வடிவேல் த/பெ குப்பன், பாதிரி கிராமம் ஆகியோர்களுக்கு ஜாதி சான்றிதழ் வழங்குமாறு கொடுத்த கடிதத்தின் பேரில் வந்தவாசி வட்டாட்சியரின் விசாரணை அறிக்கையின்படி மேற்படி இருவரும் இந்து இருளர் இனத்தை சேர்ந்தவர்கள் என்று ஜாதி சான்றிதழ்

வழங்கியதாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் ஜாதி சான்றிதழை தான், தான் மேற்படி நபர்களுக்கு வழங்கிய ஜாதி சான்றிதழ் என்றும், மேற்படி விவரம் குறித்து காவல் துணை கண்காணிப்பாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். சரவணன் மற்றும் வடிவேலின் ஜாதிச்சான்றிதழ் அ.சா.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

14. அ.சா.11 திரு.சுப்பிரமணியன், தனது சாட்சியத்தில் தான் கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து 31.03.2012 அன்று பணி ஓய்வு பெற்றுவிட்டதாகவும், 10.08.2009 ஆம் ஆண்டு வந்தவாசி தெற்கு காவல் நிலைய வட்ட ஆய்வாளராக பணிபுரிந்த போது வந்தவாசி அரசு மருத்துவமனையில் சாட்சி சரவணன் என்பவர் மருத்துவ சிகிச்சையில் உள்ளார் என்ற தகவலை பெற்று வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு 14.00 மணிக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சரவணன் என்பவரின் வாக்குமூலத்தை பதிவு செய்து, 15.00 மணிக்கு நிலையம் வந்து வந்தவாசி தெற்கு காவல் நிலைய குற்ற எண் 480/2009 பிரிவுகள் 341, 294(பி), 323, 506(1) இதச உ/இ 3(x)(1) SC/ST Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், பின்னர் முதல் தகவல் அறிக்கையை வந்தவாசி நீதித்துறை நடுவருக்கு அனுப்பி வைத்ததாகவும், இதர நகல்களை விசாரணைக்காக வந்தவாசி துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

15. அ.சா.12 திரு. அசோக்குமார், தனது சாட்சியத்தில் தான் தற்போது தமிழ்நாடு சிறப்பு காவல் படையில் ஏழாம் பட்டாளியன் காவல் கண்காணிப்பாளர்/தளவாயாக பணியாற்றி வருவதாகவும், தான் கடந்த 10.08.2009ம் வருடம் வந்தவாசி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணியில் இருந்தபொழுது காவல் ஆய்வாளர் திரு

சுப்பிரமணியம் என்பவர் சரவணன் என்பவரிடம் மருத்துவமனையில் புகார் வாக்குமூலம் பதிவுசெய்து அதன் அடிப்படையில் நிலையம் வந்து வந்தவாசி தெற்கு காவல்நிலைய குற்ற எண்.480/2009 சட்டப்பிரிவுகள் 341.294(b),323,506(Ii) IPC r/w.3(x)(1) of SC/ST(POA) Act ஆக வழக்கு பதிவு செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கை தான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சாமிநாதன் முருகன் முன்னிலையில் மாலை 5.00 மணிக்கு பார்வை மகஜர்கள் மாதிரி வரைபடங்கள் தயார் செய்ததாகவும், பின்னர் நேரில் பார்த்த சாட்சிகள் வடிவேலன் சிவராமன், சரவணன். அலாவுதின், ரஹமத்வுல்லா, சம்பத் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்ததாகவும், எதிரி தமின்பாஷா என்பவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும், சாட்சிகள் 1,2 மற்றும் எதிரிகளுக்கு ஜாதிச்சான்று பெற்று மண்டல துணை வட்டாட்சியர் திரு. கருணாநிதி மற்றும் திரு.முருகன் வருவாய் கோட்டாட்சியர் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்ததாகவும், மருத்துவர் சுதாகர் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவுசெய்ததாகவும், முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த காவல் ஆய்வாளர் திரு சுப்பிரமணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து புலன் விசாரணை முடித்து இறுதியறிக்கை தாக்கல் செய்ததாகவும், தனக்கு பின்பு வந்த காவல் துணை கண்காணிப்பாளர் திரு பன்னீர்செல்வம் என்பவர் இந்த வழக்கில் திருத்தப்பட்ட இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளதாகவும், அவருடைய கையொப்பம் தனக்கு நன்கு தெரியும் என்றும் சாட்சியமளித்துள்ளார். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.8 ஆகவும், பார்வை மகஜர்கள் மாதிரி வரைபடங்கள் அ.சா.ஆ.9 முதல் 12 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடித்துக்கொள்ளப்பட்டது.

16. அரசு தரப்பில், அ.சா.1, 2 இருவரும், இந்து இருளர் வகுப்பை சேர்ந்தவர்கள் என்றும், 1,2 எதிரிகள் இருவரும் முஸ்லீம்–ரப்பை வகுப்பை சேர்ந்தவர்கள் என்றும், 10.08.2009ந் தேதியன்று, காலை 7.30 மணிக்கு வந்தவாசி கேட்டை மூலை அருகில் முன்விரோதம் காரணமாக, 1ம் எதிரி அ.சா.2யை இழிவுபடுத்த வேண்டுமென்ற நோக்கத்தில், அவரை வழிமடக்கி தடுத்து நிறுத்தியதாகவும், அ.சா.2யை பார்த்து " எலி கறி தின்ற இருள பையனுக்கு இவ்வளவு திமிர மரியாதையாய் பணத்தை கொடுடா தேவடியா பையா " என்று பொதுவிடத்தில், பொதுமக்களின் முன்னிலையில், இழிவாக பேசியதாகவும், தன்னிச்சையாக அ.சா.2 யை கையால் மார்ப்பின் மீது அடித்து சொற்ப காயம் ஏற்படுத்தியதாகவும், அதன் தொடர்ச்சியாக அதே நாள், காலை 9.45 மணியளவில், வந்தவாசி டவுன், பிணாங்கு காதர் தெரு அருகில் உருது பள்ளி அருகில் அ.சா.1 வந்தபோது 1ம் எதிரி அவரை வழிமறித்து தடுத்து நிறுத்தி அ.சா.1யை பார்த்து " டேய் இருள தேவடியா பையா " என்று ஜாதி பெயரைச் சொல்லி இழிவாக பேசி அ.சா.1யை பார்த்து " உன்னை ஒழிக்காமல் விடமாட்டேன்" என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும், 2ம் எதிரி, 1ம் எதிரி அ.சா.2யை வழிமறித்து தடுத்தபோதும், கொலை மிரட்டல் விடுத்தபோதும் உடனிந்ததாகவும், 2ம் எதிரி, அ.சா.2யை பார்த்து " இருள நாயே வாங்கிய பணத்தை கொடுடா" என்று சாதியை குறிப்பிட்டு இழிவாக பேசியதாகவும், 2ம் எதிரி கையால் அ.சா.2ன் வயிற்றில் குத்தி சொற்ப காயம் ஏற்படுத்தியதாகவும் 1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 341, 323, மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989 , மற்றும் இதச பிரிவுகள் 341, 506(1) மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989 –ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 341 r/w 34, 323, 506(1) r/w 34 மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989 ன் கீழும் குற்றச்சாட்டுக்கள்

வனையப்பட்டுள்ளது என்றும், எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சாட்சிகள் 1 முதல் 12 வரையான சாட்சிகள் மற்றும் 1 முதல் 12 வரையான சான்றாவணங்கள் மூலமாகவும் சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பித்துள்ளதாகவும், எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமென்று வாதிடப்பட்டது.

17. எதிரிகள் தரப்பில், அ.சா.1 முதல் 3 வரையான சாட்சிகளை தவிர சம்பவ இடத்தில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ள மற்ற சாட்சிகள் அனைவரும் அரசு தரப்பிற்கு உதவும் வகையில் சாட்சியமளிக்கவில்லை என்றும், அ.சா.1 முதல் 3 வரையான சாட்சிகளின் சாட்சியங்களுக்கிடையே முரண்டபாடுகள் உள்ளதென்றும், அ.சா.2 எதிரிகள் அவரை ஜாதி பெயரைச் சொல்லி திட்டியதாகவோ, எந்த எதிரி அவரை அடித்தார் என்பதை குறித்தோ குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை என்றும், இந்த சம்பவ சமயத்தில் அ.சா.1,2 இருவரும். எதிரிகள் இருவரையும் வழிமடக்கி, அசிங்கமாக திட்டி, ஒழிந்துவிடுவதாக கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், அது தொடர்பாக 2ம் எதிரி புகார் கொடுத்து, குற்ற எண்.482/2009 ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், புலன் விசாரணை அதிகாரி மேற்சொன்ன வழக்கையும், இந்த வழக்கையும் ஒன்றாக விசாரணை செய்யாமல் மேற்படி வழக்கானது கு.வி.மு.ச பிரிவு 468(2)ன்படி நீதிமன்றத்தால் முதல் தகவல் அறிக்கை முடிக்கப்பட்டுள்ளது என்றும், புலன் விசாரணை அதிகாரி உரிய நேரத்திற்குள் புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றும், 2ம் எதிரியிடமிருந்து, அ.சா.2 பெற்ற பணத்தை ஏமாற்றவேண்டுமென்ற நோக்கத்தோடு, அ.சா.1 பொய்யான புகார் கொடுத்து, இந்த வழக்கு தாக்கல்

செய்யப்பட்டிருப்பதாகவும், அ.சா.1, 2க்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயங்களை உறுதி செய்யும் வகையில் மருத்துவ ஆவணங்கள் இல்லை என்றும், எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்க தவறிவிட்டதால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டு, அதற்கு ஆதரவாக

1) 2015 (2) MWN (Cr) 628- Periyasamy, Thangam @ Ramasamy Vs. State rep.by the Deputy Superintendent of Police. Avinashi Sub division Kovilpalayam Police Station Coimbatore District.
2) 2022 (1) MWN (Cr) 229- Subramani and ors VS. State rep.by Inspector of police, Chozhatharam police station. Srimushnam, Cuddalore District.

என்ற முன்தீர்ப்புகள் முன்னிடப்பட்டுள்ளது.

18. அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களில் இருந்தும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதுரையில் இருந்தும் தற்போது இந்நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனைகள் யாதெனில்,

1. 1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 341, 323, மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989 , மற்றும் இதச பிரிவுகள் 341, 506(1) மற்றும் பிரவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989 –ன் கீழ் குற்றவாளி என முன்னிடப்பட்டுள்ள இந்த வழக்கு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா?

2. 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 341 r/w 34, 323, 506(1) r/w 34 மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989 ன் கீழ் குற்றவாளி என முன்னிடப்பட்டுள்ள இந்த வழக்கு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா?

19. **<u>பிரச்சனை எண். 1 மற்றும் 2 க்கு தீர்வு:</u>**

இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதுரையில் இருந்தும், அ.சா.1 முதல் 12 வரையான சாட்சிகளின் சாட்சியத்திலிருந்தும் அ.சா.ஆ.1 முதல் 12 வரையான சான்றாவணங்களிலிருந்தும் எதிரிகள் மீதான குற்றசாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்று ஆராய்ந்து பார்க்கும் பொழுது, அரசு தரப்பில் அ.சா. 8 மற்றும் அ.சா.10 ஆக எதிரிகள் மற்றும் அ.சா.1 , 2க்கு ஜாதி சான்றிதழ்கள் வழங்கிய மண்டல துணை வட்டாட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மேற்படி அ.சா.8 மற்றும் 10 வழங்கிய ஜாதி சான்றிதழ்களான அ.த.சா.ஆ.2,3 மற்றும் 6ன் படி 1,2 எதிரிகள் முஸ்லீம்–லப்பை (BC) வகுப்பை சேர்ந்தவர்கள் என்பதையும், அ.சா.1 மற்றும் 2 இருவரும் இந்து –இருளர் வகுப்பை சேர்ந்தவர்கள் என்பதையும் அறிய முடிகிறது.

20. புகார்தாரர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் 10.8.2009 அன்று காலையில் 7.30 மணி அளவில் அவரும், அ.சா.2ம் டீக்கடையில் டீ குடித்துக் கொண்டு இருந்தபோது, 1ம் எதிரி அங்கு வந்து, அ.சா.2 யை பார்த்து ஜமீன் பாஷாவிடம் கல்லு உடைக்க பணம் வாங்கினாயே? ஏன் கொடுக்கவில்லை என்று கேட்டதற்கு அ.சா.2 ஜமீன் பாஷாலிடம் வாங்கின காசை தான் கொடுக்கிறேன் நீ ஏன் கேட்கிறாய் என்று

கேட்டதற்கு இருளர் பையனுக்கு இவ்வளவு ஆச்சா என்று திட்டி மார்பின் மீது அடித்ததாகவும், வாங்கின காசை குடுப்பதற்கு கசக்கிறதாடா இருளர் நாயே என்று திட்டியதாகவும், ஜமீன் பாஷா வடிவேலுவை குத்தியதாகவும், அதன்பிறகு மழையூர் சரவணன் தெள்ளார் சிவராமன் கோட்டைமுலையில் கடை வைத்திருக்கிற அலாவூதீன் சேர்ந்து வடிவேலுவை அழைத்துக் கொண்டு போய் வந்தவாசி அரசு மருத்துவமனையில் சேர்த்ததாவும், சேர்த்து முடித்து விட்டு வீட்டிற்கு வரும் போது பினாங்கார தெருவில் உருதுபள்ளி அருகில் வரும் போது முகமது என்பவர் அவரை வழியில் மடக்கி அவர் இரண்டு சக்கர வாகன வண்டியை எடுத்துக் கொண்டு குறுக்கில் போட்டு இருளர் சங்கம் வைத்துக் கொண்டு சேர்ந்து எல்லாரையும் மிரட்டுகிறாயா? உன்னை ஒழித்துக் கட்டுகிறேன் என்று அவர் கழுத்தை நெறித்ததாகவும், அதன் பிறகு அதன்பிறகு மழையூர் சரவணன் தெள்ளார் சிவராமன், காயிதே மில்லத் நகரை ரகமத்துல்லா பிருதூர் சம்பத் எல்லாம் சேர்ந்து அவரை விலக்கி விட்டதாவும், ரகமத்துல்லா தன்னை மருத்துவமனையில் சேர்த்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 அவருடைய சாட்சித்தில், 10.8.2009 அன்று காலை 7.30 மணிக்கு வந்தவாசிக்கு டீ குடிக்க போனபோது, 1,2 எதிரிகள் அங்கிருந்ததாகவும், ஜமீம்பாஷாவுக்கு கொடுக்க வேண்டிய காசை கேட்டதற்கு நீ கேட்காதே என்று சொன்னதற்கு அவரை மார்பின் மீது அடித்து விட்டதாகவும், சிவராமன், சரவணன், சம்பத் எல்லாம் அங்கிருந்ததாகவும், சங்க தலைவர் அவரை ஆஸ்பத்திரியில் சேர்த்ததாகவும், அவரையும் அடித்து விட்டதாகவும், அவரும் மருத்துவமனையில் இருந்ததாக சாட்சியமளித்துள்ளார். அரசு தரப்பில் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டவர் அவரது சாட்சியத்தில் 10.8.2009 அன்று காலையில் 7.30 மணிக்கு சரவணனை பார்பதற்காக வந்தவாசி கோட்டை மைதானத்தில் உள்ள டீக் கடையில் நின்று கொண்டு இருந்ததாகவும், வடிவேலு, சரவணனும் பேசிக்

கொண்டிருந்ததாகவும், அப்போது முகமது அலி என்பவர் வந்து வடிவேலுவிடம் ஆர்கியுமெண்ட் செய்து கொண்டிருந்ததாகவும், வடிவேலுவை கையால் அடித்ததாகவும், கேஸ்டை சொல்லி இருளர் ஜாதியை சொல்லி திட்டியதாகவும், அவரும், சரவணன் விலக்கி விட்டதாகவும், அவரும் மற்றவர்களும் வடிவேலுவை வந்தவாசி அரசு மருத்துவமனையில் கொண்டு போய் சேர்த்ததாகவும், அவர் வரும் போது தெருபாடசாலை வழியில் முகமது அலி, சரவணனை தாக்கியதாகவும், அவர் ஜாதியை சொல்லி தாக்கியதாகவும், ஜமீனர் பாஷாவும் உடன் இருந்ததாவும், வடிவேலுவை ஜமீன்பாஷா, முகமது அலி கைகளால் தாக்கியதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

21. அ.சா.2யை, 1ம் எதிரி வழிமடக்கி, " எலி கறி தின்ற இருள பையனுக்கு இவ்வளவு திமிர மரியாதையாய் பணத்தை கொடுடா தேவடியா பையா " என்று பொதுவிடத்தில், பொதுமக்களின் முன்னிலையில், ஜாதியை குறிப்பிட்டு இழிவாக பேசி தொல்லை கொடுத்ததாகவோ, கையால் அ.சா.2ன் மார்ப்பில் அடித்து சொற்ப காயம் ஏற்படுத்தியதாகவோ, சாட்சியமளிக்கவில்லை. மேலும் அ.சா2, 1ம் எதிரி மற்றும் ஒரு அகமது பாஷா அங்கு இருந்தார்கள் என்று சாட்சியமளித்துள்ள நிலையில், அவர்களில் யார் அ.சா.2யை மார்பின் மீது அடித்தார்கள் என்பதை குறித்து குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. அ.சா.1 மற்றும் அ.சா.3 ஆகிய இருவரும் அ.சா.2யை அவரது ஜாதி பெயரைச் சொல்லி திட்டியதாக சாட்சியமளித்துள்ள போதும், அ.சா.2, 1,2 எதிரிகள் அவரை, அவருடைய ஜாதி பெயரைச் சொல்லி திட்டியதாக சாட்சியமளிக்கவில்லை. அவருக்கு ஏற்பட்ட காயங்களை குறித்தும் சாட்சியமளிக்கவில்லை. மேலும். அ.சா.2யை, 2ம் எதிரி அவரை வயிற்றில் குத்தி சொற்ப காயம் ஏற்படுத்தியதாகவோ,

அ.சா.2யை பார்த்து " இருள நாயே வாங்கிய பணத்தை கொடுடா" என்று சாதியை குறிப்பிட்டு இழிவாக பேசியதாகவோ சாட்சியமளிக்கவில்லை.

22. சம்பவ சமயத்தில் சண்டையை விலக்கிவிட்டதாக அரசு தரப்பில் சம்பவத்தை கண்ணுற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ள அ.சா.4 முதல் 8 வரையான சாட்சிகளும், அரசு தரப்பில் பிறழ் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

23. அ.சா.2க்கு சிகிச்சையளித்த மருத்துவர் அ.சா.9 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், 10.08.2009 அன்று வந்தவாசி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது, 35 வயதுடைய வடிவேல் த/பெ குப்பன் என்பவர் அன்று காலை 07.00 மணியளவில் வந்தவாசி கோட்டை மூலை அருகே தன்னை இரண்டு தெரிந்த நபர்கள் கை, கால்களால் அடித்ததாக கூறியதாகவும், அவரை பரிசோதித்த போது கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டதாகவும், 1. வயிறு வலி, 2. நெஞ்சு வலி, 3. வலது பக்க தாடை வலி இருப்பதாக கூறியதாகவும், அவரை பரிசோதித்து உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்ததாகவும், அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று சான்று வழங்கியதாகவும் அதே நாள் காலை 10.10 மணிக்கு சரவணன் த/பெ ராஜேந்திரன் என்பவர் தன்ளை தெரிந்த ஒரு நபர் கைகாலால் வந்தவாசி விகே ஓட்டல் அடித்ததாக கூறிசிகிச்சைக்கு வந்ததாகவும், அவரை பரிசோதித்த போது கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டதாகவும், 1. இடது காது வலி, 2. வயிறு வலி, 3. நெஞ்சு வலி இருப்பதாகவும், வீக்கமாக உள்ளதாகவும் கூறியதாகவும் அவரை பரிசோதித்து உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்ததாகவும்,

அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று சான்று வழங்கியதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

24. எதிரிகள் தரப்பில், அ.சா.2 அவருக்கு ஏற்பட்ட காயத்தை பொறுத்து சொல்லவில்லை என்றும், மேலும் மருத்துவரிடம் வலி இருப்பதாக பொய்யாக சொல்லியிருக்க வாய்ப்புள்ளது என்றும் வாதிடப்பட்டது. மேலும் குறுக்கு விசாரணையின்போது, மருத்துவர் தொட்டபோது வலியிருப்பதாக இருவரும் கூறவில்லை என்றும், காயம்பட்ட நபர்கள் கூறிய வலியானது அவர்கள் பொய்யாக சொல்லியிருப்பதற்கு வாய்ப்புள்ளது என்று மருத்துவர் சாட்சியமளித்திருப்பதாகவும், மருத்துவ சாட்சியங்களும், அரசு தரப்பிற்கு உதவும் வகையில் இல்லை என்றும் வாதிடப்பட்டது. மேலும் எதிரிகள் தரப்பில், அ.சா.1,2 மீது 2ம் எதிரி கொடுத்த புகாரையும், இந்த வழக்கின் புகாரையும் ஒரே புலன் விசாரணை அதிகாரி தான் விசாரித்திருக்கவேண்டும் என்றும், இந்த வழக்கின் புலன் விசாரணை உரிய நேரத்தில் முடிக்கப்படவில்லை என்றும் வாதிட்டு அதற்கு ஆதரவாக

1) ***2015 (2) MWN (Cr) 628- Periyasamy, Thangam @ Ramasamy Vs. State rep.by the Deputy Superintendent of Police. Avinashi Sub division Kovilpalayam Police Station Coimbatore District*** *என்ற முன்தீர்ப்புகள் முன்னிடப்பட்டது. மேற்படி முன்தீர்ப்பில்*

> *" As per Rule 7(2) investigation required to be complete within 30 days' period , but PW15 took morethan 3 months to complete investigation - Earliest version of complaint made to Head Constable suppressed – FIR." என்றும்*

2) 2*022 (1) MWN (Cr) 229- Subramani and ors VS. State rep.by Inspector of police, Chozhatharam police station. Srimushnam, Cuddalore District.*

> *" POLICE STANDING ORDERS, PSO 588-A-Case and Counter case – Both complaints registered in same police station- Complaint lodged by Accused dealt with separately- Investigation not in compliance with PSO 588-A-Held, Complaint lodged by Accused suppressed."*

என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

25. அரசு தரப்பில், அ.சா.1யை, 1ம் எதிரி காலை 9.45 மணியளவில், வந்தவாசி டவுன், பினாங்கு காதர்ஷா தெரு, உருது பள்ளி அருகில், வழிமறித்து தடுத்து நிறுத்தியதாகவும், " டேய் இருள தேவடியா பையா" என்று திட்டி ஜாதி பெயரைச் சொல்லி இழிவாக பேசியதாகவும், "உன்னை ஒழிக்காமல் விடமாட்டேன்"கொலை செய்துவிடுவதாக மிரட்டி உயிரச்சம் ஏற்படுத்தியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அ.சா.1 அவருடைய சாட்சியத்தில், 1ம் எதிரி அ.சா.1யை வழியில் மடக்கி அவர் இரண்டு சக்கர வாகன வண்டியை எடுத்துக் கொண்டு குறுக்கில் போட்டு இருளர் சங்கம் வைத்துக் கொண்டு சேர்ந்து எல்லாரையும் மிரட்டுகிறாயா? உன்னை ஒழித்துக் கட்டுகிறேன் என்று தன் கழுத்தை நெறித்ததாகவும், அதன் பிறகு அதன்பிறகு மழையூர் சரவணன் தெள்ளார் சிவராமன், காயிதே மில்லத் நகரை ரகமத்துல்லா பிருதூர் சம்பத் எல்லாம் சேர்ந்து தன்னை விலக்கி விட்டதாவும், ரகமத்துல்லா தன்னை மருத்துவமனையில் சேர்த்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1, 1ம் எதிரி, அவரை " டேய் இருள தேவடியா பையா" என்று ஜாதி பெயரைச்

சொல்லி திட்டியதாக குறிப்பிபட்டு சாட்சியமளிக்கவில்லை. அ.சா.1 உடன் மேற்படி சம்பவ சமயத்தில் உடனிருந்ததாக அ.சா.1 ஆல் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களில் சிவராமன் என்பவரை தவிர மற்ற அனைவரும், பிறழ் சாட்சிகளாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

26. அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டவர், முதல் விசாரணையில் அ.சா.1யை, 1ம் எதிரி தாக்கியதாகவும், அவர் ஜாதியை சொல்லி தாக்கியதாகவும், ஜமீனர் பாஷாவும் உடன் இருந்ததாவும் சாட்சியமளித்துள்ளார். ஆனால் அ.சா.3 அந்த சமயத்தில் 2ம் எதிரி அங்கு இருந்ததாக சாட்சியமளிக்கவில்லை. மேலும், அ.சா.3 அவருடைய குறுக்கு விசாரணையில் கொடுக்கவேண்டிய பணத்தை திருப்பி கேட்டார் என்றும், இல்லை என்றால் பேசியபடி கல்லுடைத்து கொடுக்குவேண்டும் என்று கேட்டார் என்றும் என்றால் சரிதான் என்றும், முகமது அலி வடிவேலுவிடம் கல் உடைப்பது குறித்து பணம் வாங்கிக்கொண்டதாலும், பணம் கல் உடைத்து தரவில்லை என்றால் பணத்தை திருப்பிக்கொடுக்குமாறு கேட்டதால் தான் தகராறு என்றால் சரிதான் என்றும், ,,,,, வடிவேலுவை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துவிட்டு சரவணனும் தானும் வந்துவிட்டதாகவும், சரவணன் காவல்நிலையத்திற்கு தகவல் சொல்வதாக சொல்லிவிட்டு தான் கிளம்பினார் என்றும், மருத்துவமனையில் தான் அரை மணி நேரம் இருந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார் . மேலும் காலை 7.30 மணிக்கு சரவணனை தாக்கியதாக சாட்சியமளித்து, மீண்டும் 9.00 மணிக்கு சரவணனை தாக்கியதாக மாற்றி சாட்சியமளித்துள்ளார். மேலும் சரவணனுடன் காவல்நிலையத்திற்கு சென்றதாகவும், சரவணன் காலை 9.45 லிருந்து 10.00 மணிக்கு காவல்நிலையத்திற்கு உள்ளே சென்றதாகவும், அப்போது தான் காவல்நிலையத்திற்கு வெளியே இருந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

27. அ.சா.1 மருத்துவரிடம், தெரிந்த ஒரு நபர் கைகாலால் தாக்கியதாக கூறி இடது காதில் வலியிருப்பதாகவும், தோள்பட்டையில் வலி இருப்பதாகவும், நெஞ்சு வலி இருப்பதாகவும், வீக்கமாக உள்ளதாகவும் தெரிவித்ததாக, காயச்சான்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு முற்றிலும் மாறுப்பட்டு, அ.சா.1, 1ம் எதிரி, அவரை கழுத்தை நெறித்ததாகவும், அதனால் அவருக்கு கழுத்திலும், இடது கன்னத்திலும் காயம்பட்டதாக சாட்சியமளித்துள்ளார். ஆனால் அவர் கூற்றை உறுதி செய்யும் வகையில் மருத்துவ ஆவணங்கள் இல்லை. மேலும் சம்பவ சமயத்தில் உடனிருந்ததாக சொல்லப்படும் அ.சா.3 ன் சாட்சியத்திலிருந்து, சம்பவ சமயத்தில் அவர் அ.சா.1 உடன் இருந்தாரா என்பது சந்தேகம் அளிக்கும் வகையில் உள்ளது. மருத்துவர் காலை 10.10 மணியளவில் அ.சா.1க்கு சிகிச்சை அளித்ததாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.1ம் இருந்து மருத்துவமனையில் புகார் வாக்குமூலம் பெற்றதாக கண்டுள்ளது. ஆனால் அதற்கு முன்பே காவல்நிலையத்திற்குசென்றதாக அ.சா.3 சாட்சியமளித்துள்ளதிலிருந்தும் அ.சா.1 மற்றும் அ.சா.3ன் சாட்சியம் முன்னுக்குபின் முரணாக உள்ளாதிலிருந்தும், மேற்படி அ.சா.1ன் சாட்சியத்தை உறுதி செய்யும் வகையில் மருத்துவ ஆவணங்கள் இல்லை என்பதிலிருந்தும், உண்மையில் அ.சா.1யை 1ம் எதிரி வழிமறித்து தடுத்து நிறுத்தி, ஜாதி பெயரைச் சொல்லி திட்டி, தாக்கி சொற்ப காயத்தை ஏற்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்தாரா? என்பது சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் உள்ளது.

28. மேலும், அரசு தரப்பில், அ.சா.2யை , 1 மற்றும் 2 எதிரிகள் தடுத்து நிறுத்தி ஜாதி பெயரைச் சொல்லி திட்டி அவரை தாக்கி காயப்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டிருப்பினும், அ.சா.1 மற்றும் 3 , அ.சா.2யை எதிரிகள் ஜாதி

பெயரைச் சொல்லி திட்டி தாக்கியதாக சாட்சியமளித்துள்ளபோதும், அ.சா.2 அதனை மெய்ப்பிக்கும்வகையில் சாட்சியமளிக்கவில்லை.

29. அ.சா.1 மற்றும் 3 சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து, 2ம் எதிரியிடம் அ.சா.2 முன்பணம் பெற்றுள்ளதை அறிய முடிகிறது. ஆனால் அ.சா.2 முன்பணம் எதுவும் பெறவில்லை என்று மாற்றி சாட்சியமளித்துள்ளார். மேற்படி முன்பணத்தை கேட்டது தொடர்பாக எதிரிகளுக்கும், அ.சா.1 மற்றும் அ.சா.2க்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டுள்ளது அறிய முடிகிறது. மேற்படி பிரச்சனையின்போது 2ம் எதிரி புகார் கொடுத்து, அ.சா.1 மற்றும் 2க்கு எதிராக இவ்வழக்கு காவல்நிலையத்தில் குற்ற எண்.482/2009 வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதை எ.த.சா.ஆ.1 மூலமாக அறிய முடிகிறது. எதிரிகள் தரப்பில் , ஒரே சம்பவம் தொடர்பாக இருதரப்பினர்களும் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கும்போது, ஒரு புலன் விசாரணை அதிகாரி தான் அதை விசாரித்து எது உண்மை என்பதை கண்டறிந்து, இறுதி அறிக்கை தாக்கல் செய்திருக்கவேண்டும், அதன்படி ஒரே புலன் விசாரணை அதிகாரி விசாரிக்கவில்லை என்றும், எதிரிகள் கொடுத்த புகாரில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லையென்பதால் மேற்படி வழக்கு முடிக்கப்பட்டுள்ளது என்றும் உரிய காலத்திற்குள் புலன் விசாரணை அதிகாரியால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்றும் வாதிடப்பட்டது.

30. இந்த வழக்கில், அரசு தரப்பில், அ.சா.12 புலன் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை காட்ட எந்த ஆவணத்தையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அ.சா.1 முதல் 3 வரையான சாட்சிகளின் சாட்சியங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டுள்ளது. மேலும், மேற்படி நபர்களின் சாட்சியத்திற்கு முரண்பட்டு மருத்துவ ஆவணங்கள்

உள்ளது. எனவே, சம்பவம் நடந்தபோது 1,2 எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2யை வழிமறித்து தடுத்து நிறுத்தி, ஜாதி பெயரைச் சொல்லி அசிங்கமாக திட்டி, அடித்து சொற்ப காயத்தை ஏற்படுத்தினார்கள் என்பதையும், கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்பதையும் சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்கும் வகையில் அ.சா.1, 2 மற்றும் 3 சாட்சியமளிக்கவில்லை. மேலும் அரசு தரப்பில் முன்னிடப்பட்டுள்ள மற்ற சாட்சிகளும் அரசு தரப்பு வழக்கை மெய்ப்பிக்கும் வகையில் சாட்சியமளிக்கவில்லை. எனவே, அனைத்து விதத்திலும் அரசு தரப்பில் 1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 341, 323, மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989 , மற்றும் இதச பிரிவுகள் 341, 506(1) மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 341 r/w 34, 323, 506(1) r/w 34 மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989ன் கீழும் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு இடமின்றி மெய்பிக்க தவறிவிட்டதாக தீர்வு காணப்படுகிறது. எனவே, சந்தேகத்தின் பலனை 1,2 எதிரிகளுக்கு அளித்து, 1ம் எதிரி இதச பிரிவுகள் 341, 323, மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989 , மற்றும் இதச பிரிவுகள் 341, 506(1) மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989ன் கீழும், 2ம் எதிரி இதச பிரிவுகள் 341 r/w 34, 323, 506(1) r/w 34 மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானிக்கப்படுகின்றது.

**முடிவாக,** 1ம் எதிரி இதச பிரிவுகள் 341, 323, மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989 , மற்றும் இதச பிரிவுகள் 341, 506(1) மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989ன் கீழும், 2ம் எதிரி இதச பிரிவுகள் 341 r/w 34, 323, 506(1) r/w 34 மற்றும் பிரிவு 3(i)(x) of SC/ST (POA) Act 1989ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, 1 ,2

எதிரிகளை குவிமுச பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

1,2 எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணைய முறியை மேல்முறையீட்டு கால அவகாசத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் அரசு தரப்பில் சான்றுப்பொருட்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லையென்பதால் அதுகுறித்து உத்தரவு ஏதுமில்லை.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கொப்பம் செய்யப்பட்டு, பின்பு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13–ஆம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

V SUTHA Digitally signed by V SUTHA Date: 2026.08.13 18:14:03 +0530

அமர்வு நீதிபதி,
சிறப்பு நீதிமன்றம்
(எஸ்.சி/எஸ்.டி. வழக்குகள்),
திருவண்ணாமலை.

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| அ.சா. எண் | தேதி | பெயர் | சாட்சியின் விவரம் |
|---|---|---|---|
| அ.சா.1 | 14.11.2018 | திரு.சரவணன் | புகார்தாரர் |
| அ.சா.2 | 14.11.2018 | திரு.வடிவேல் | பாதிக்கப்பட்டவர் |
| அ.சா.3 | 14.11.2018 | திரு.சிவராமன் | சம்பவத்தை நேரில் பார்த்தவர் |

| | | | |
|---|---|---|---|
| அ.சா.4 | 14.11.2018 | திரு.சரவணன் | சம்பவத்தை நேரில் பார்த்தவர் |
| அ.சா.5 | 14.11.2018 | திரு.அலாவுதீன் | சம்பவத்தை நேரில் பார்த்தவர் |
| அ.சா.6 | 14.11.2018 | திரு.ரகமத்துல்லா | சம்பவத்தை நேரில் பார்த்தவர் |
| அ.சா.7 | 14.11.2018 | திரு.சம்பத் | சம்பவத்தை நேரில் பார்த்தவர் |
| அ.சா.8 | 05.02.2019 | திரு.கருணாநிதி | எதிரிகளுக்கு ஜாதி சான்றிதழ் வழங்கியவர் |
| அ.சா.9 | 05.11.2019 | திரு.டாக்டர் சுதாகரன் | காயச்சான்றிதழ் வழங்கியவர் |
| அ.சா.10 | 18.11.2019 | திரு.முருகன் | அ.சா.1, மற்றும் 2 க்கு ஜாதி சான்றிதழ் வழங்கியவர். |
| அ.சா.11 | 02.12.2019 | திரு.சுப்பிரமணியன் | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவர் |
| அ.சா.12 | 16.07.2026 | திரு.அசோக்குமார் | புலன் விசாரணை அதிகாரி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| அ.சா.ஆ. எண் | சான்றாவணத்தின் விவரம் | சான்றாவணம் குறியீடு செய்யப்பட்ட விவரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகாரிலுள்ள அ.சா.1ன் கையெழுத்து மட்டும் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | எதிரி முகமமது அலியின் ஜாதி சான்றிதழ் | அ.சா.8 |
| அ.சா.ஆ.3 | எதிரி தமீனின் ஜாதி சான்றிதழ் | அ.சா.8 |
| அ.சா.ஆ.4 | அ.சா.2 ன் காயச்சான்றிதழ் | அ.சா.9 |
| அ.சா.ஆ.5 | அ.சா.1 ன் காயச்சான்றிதழ் | அ.சா.9 |
| அ.சா.ஆ.6 | அ.சா.1, 2ன் ஜாதி சான்றிதழ் | அ.சா.10 |
| அ.சா.ஆ.7 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.11 |
| அ.சா.ஆ.8 | புகார் வாக்குமூலம் | அ.சா.12 |
| அ.சா.ஆ.9 | பார்வை மகசர் | அ.சா.12 |
| அ.சா.ஆ.10 | பார்வை மகசர் | அ.சா.12 |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.11 | மாதிரி வரைபடம், | அ.சா.12 |
| அ.சா.ஆ.12 | மாதிரி வரைபடம் | அ.சா.12 |

**<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்:</u>** – இல்லை

**<u>எதிரிகள் தரப்பில் சாட்சிகள்:–</u>** இல்லை

**<u>எதிரிகள் தரப்பில் சான்றாவணங்கள்–</u>**

| **அ.சா.ஆ. எண்** | **சான்றாவணத்தின் விவரம்** | **சான்றாவணம் குறியீடு செய்யப்பட்ட விவரம்** |
|---|---|---|
| எ.த..சா.ஆ.1 | 2ம் எதிரி அ.சா.1 மற்றும் 2ன் மீது வந்தவாசி தெற்கு காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மற்றும் அதன்பேரிலான முதல் தகவல் அறிக்கை குற்ற எண்.482/2009 | அ.சா.12 |
| எ.த.சா.ஆ.2 | வந்தவாசி தெற்கு காவல்நிலைய குற்ற எண்.482/2009ல் இறுதியறிக்கை தாக்கல் செய்யவில்லையென்பதால், வந்தவாசி நீதித்துறை நடுவர் கு.வி.மு.ச பிரிவு 468(2)ன்படி முதல் தகவல் அறிக்கை முடிக்கப்பட்டதற்கான உத்தரவு நகல் | அ.சா.12 |

**<u>எதிரிகள் தரப்பில் சான்றுப்பொருள்:</u>** இல்லை

V SUTHA
Digitally signed by V SUTHA
Date: 2026.08.13 18:14:14 +0530

அமர்வு நீதிபதி,
சிறப்பு நீதிமன்றம்
(எஸ்.சி/எஸ்.டி. வழக்குகள்),
திருவண்ணாமலை.

**Draft / Fair Judgment**

**Spl.S.C.No.9/2019**

**Dated: 13.08.2026**